முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பீர்முகமது அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

09.10.2018, செவ்வாய்க்கிழமை

1. **ஞான ஒளி கொண்ட குருராசா**
**ஞான வழி காட்டும் குருபரா**
**ஞானதேசிகனாக வந்த முருகா**
**ஞானியே ஆறுமுக அரங்கா**
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் ஒளி சூட்சும நூலை
வரங்களென **விளம்பி தரிவை திங்கள்**
**வல்லமைபட மூவேழீர் திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 23ம் நாள் 09.10.2018, செவ்வாய்க்கிழமை)**
3. **வாரமதில் பீர்முகம்மது யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
சோரமிலா உலகம் அமைய
சுபிட்சமான வாழ்வு நலம் காண
4. காணவே அவசியம் வழிபாட்டை
கண்டுரைப்பேன் சத்தியநெறி மீறா
ஞானவழி வருவோர் தொடர
ஞானிகளை பூஜித்து வருகை காண
5. காணவே வாழ்வில் வளமும்
கட்டமில்லா ஏற்றமும் திடமும்
ஞானமுடன் செல்வவளமும் பெறுவர்
நாட்டிடுவேன் அரங்கன் தலைமை
6. தலைமை ஞானிகளின் தலைமையாக
தருமபலமுடன் சேவைகள் நடக்க
தலைமை ஏற்று உலகோர் வர
தரணியே பெருமாற்றம் காணும்
7. காணும் ஞான உலகமாக
கலியுகத்தார் பேதம் கருதா
ஞானவழி நடத்தும் அரங்கன்
ஞானக்கொள்கையை ஏற்று வர
8. வருகவே நல்லத் தலைமையும்
வல்லமையான ஞானத்தலைமையும்
முருகப்பெருமான் அருட்தயவு மிக்க
முழுமை ஞானஅவதார அரங்கன்
9. அரங்கன் சீடர்கள் வழியும்
அற்புதம் நடக்கும் என்பேன்
வரங்களென நல்வழித் தொடர
வையகமெங்கும் சமத்துவ சமதர்ம

10. சமதர்ம நிலை பெருகியே
சன்மார்க்கம் தழைத்துமே
நேமமுடன் சகல வளமும் காணும்
நிலவுலகே ஞான பாதுகாப்பு பெறும்

11. பெருகவே அரங்கன் தருமம்
பேரருள்பட அகிலம் காக்கும்
வறுமை போக்கி வளம் கூட்டும்
வழுத்திய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் பீர்முகமது அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஞானம் பெற்று வெற்றி கண்டு ஞானஜோதியாம் ஞான ஒளிதனை கொண்டிட்ட மகா குருவே குருராஜனே உலகின் அறியாமையை போக்கி ஞானவழி காட்டும் குருபரனே அரங்கனே ஞானதேசிகனாக அவதாரம் செய்திட்ட முருகப்பெருமானே மகா ஞானியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 23ம் நாள் 09.10.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பீர்முகமது யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பீர்முகமது.

குற்றம் இல்லாத தூய உலகம் அமைந்திட மக்களெல்லாம் சுபிட்சமான வாழ்வு நலம் பெற்றிட அவரவரும் அவசியம் அரங்கன் கூறும் தூயநெறியினை ஏற்று சத்தியநெறி மீறாது அவசியம் தினம்தினம் மறவாமல் முருகப்பெருமான் வழிபாட்டினை செய்வதுடன் அரங்கனை பின்தொடர்ந்து ஞானவழி வருவோர் எல்லாம் தொடர்ந்து வருவதுடன் ஞானிகளை பூஜைகள் செய்தும் வர, அவரவரின் வாழ்வினில் வளமும் கஷ்டங்கள் ஏதும் இல்லாத முன்னேற்றமும் மனோதிடமும் ஞானமுடன் செல்வவளமும் பெறுவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமையானது ஞானிகளின் தலைமையாகும். அரங்கன் தலைமையில் தருமபலமுடன் எல்லையில்லாது சேவைகள் நடந்து வருகின்றன. தருமத்தினை ஆறுமுக அரங்கனும் தலைமையேற்று நடத்தி வருவதினால் அரங்கன் தலைமையை உலக மக்களெல்லாம் அரங்கனை பின்தொடர்ந்து அரங்கன் தலைமையை ஞானிகளின் தலைமையாக உலகோர் ஏற்றுவர இந்த உலகமே பெருமாற்றம்தனை காணுமப்பா.

கலியுகத்தினை ஞானயுகமாக ஞானஉலகமாக மாற்றிட பேதாபேதம் கருதாமல் ஞானவழிதனிலே மக்களை நடத்தி வருகின்ற ஆறுமுக அரங்கனின் பேதாபேதம் அற்ற, ஞானக் கொள்கைகளை மக்கள் ஏற்று கடைப்பிடித்து வரவர, உலகினில் முருகப்பெருமானின் அருட்தயவு மிக்கவரும் வல்லமைமிக்க நற்தலைமையும், ஞானத்தலைமையுமாகிய ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாகவும், அரங்கமகா தேசிகனாரின் சீடர்கள் மூலமாகவும் பற்பல அற்புதங்கள் நடக்கும் என்பேன் பீர்முகமது யானும்.

அரங்கனின் உபதேசங்கள் எல்லாம் நாம் கடைத்தேறிட கிடைத்திட்ட வரங்களாக எண்ணியே அவைகளை ஏற்று அரங்கன் கூறும் நல்வழியில் தொடர்ந்திட உலகமெங்கும் சமதர்மமும், சமத்துவமும் பெருகி நிற்கும். சன்மார்க்கம் தழைத்திடும், மக்களுக்கு நன்மைகளும் சலகவளமும் காணுமப்பா. இவ்வுலகம் முழுவதும் அருள் ஞான பாதுகாப்பினை பெற்றிடும்.

உலகினில் ஞானபாதுகாப்பு பெருக பெருக, ஆறுமுக அரங்கனின் தருமம் பேரருள் கூடி உலகினை காத்திடும். உலகினில் உள்ள வறுமையைப் போக்கி சர்வ வளங்களையும் பெருக்கி மக்களைக் காக்கும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறியக் கூறுகிறார் மகான் பீர்முகம்மது.

–சுபம்–